**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.95/2022**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.14** |
| **Name** | **:** | **திரு.சதீஷ்** |
| **Father's Name** | **:** | **மணிகண்டன்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.11.2023.**

**முதல் விசாரணை -**

**நான் ஆரணி சித்தேரி கிராமத்தில் வசிக்கிறேன். தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். இரண்டு வருடங்களுக்கு முன்பு ஆரணி சேத்பட் ரோட்டில் உள்ள செல்லப்பா பெட்ரோல் பங்க்கில் பெட்ரோல் போடும் வேலை செய்து வந்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். 20.10.2021 அன்று**

விசாரணை செய்தார்கள்.

காவல் ஆய்வாளர் விசாரிப்பதற்கு முன்நாள் இரவு 10.30 மணிக்கு 2 லிட்டர் கேனில் பெட்ரோல் கேட்டார். அந்த கேனில் 2 லிட்டர் பிடிக்காது என்று சொன்னேன். அதற்கு அவர் எவ்வளவு பிடிக்குதோ அவ்வளவு போடு என்று சொன்னார். நான் ரூ.185/-க்கு போட்டேன். கையில் பணம் இல்லை என்று சொன்னதால் G-pay செய்வதாக சொன்னார். என்னுடைய செல்போன் எண்.6382989303. என்னுடைய நம்பருக்கு G-pay செய்தார். மேற்படி தொகையை நான் என்னுடைய நிறுவனத்திற்கு transfer செய்துவிட்டேன்.

பெட்ரோல் வாங்கிய நபரை பார்த்தால் அடையாளம் தெரியுமா என்றால் இரண்டு வருடமாகிவிட்டதால் ஞாபகம் இல்லை என்று சாட்சி சாட்சியம் அளித்தபிறகு, கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் உள்ள நபர்களை பார்த்தால் ஞாபகம் வருகிறதா என்று சாட்சியிடம் கேட்க சாட்சி நீதிமன்றத்தில் உள்ள நபர்களை பார்த்து இல்லை என்று சாட்சியம் அளித்தார்.

போலிசார் விசாரித்தபோது பெட்ரோல் வாங்கிய நபரை அடையாளம் காட்டினேனா என்றால் அடையாளம் காட்டினேன். போலிசார் விசாரித்தபோது பெட்ரோல் வாங்கிய நபர் எந்த ஊரை சேர்ந்தவர் என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொள்ளவில்லை. ஆனால் எங்கள் ஊரில் லட்சுமிநகரில் பிரச்சனை என்று பேசிக்கொண்டதில் தெரிந்துக்கொண்டேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் விசாரித்தபோது பெட்ரோல் வாங்கிய நபரை என்றைய தினம் அடையாளம் காட்டினேன் என்றால் சம்பவம் நடந்த மறுநாளே காட்டினேன்.

**அதற்கு பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரி தான்.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.